**07.09.2022**

**OS.No. 311/2021 PW : 1, திருமதி. மல்லிகா**

**குறுக்கு விசாரணை...**

பிரதிவாதியின் தாயார் என்னிடம் வாங்கிய கடனை வசூலிக்க இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதியின் தாயார் மட்டும் என் வீட்டில் வாடகைக்கு இருந்தார். அவர் 3 வருடத்திற்கு மேல் வாடகைக்கு இருந்தார். அதை பிராதிலும், முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்று கேட்டால் என் வழக்கறிஞர் கேட்காததால் நான் சொல்லவில்லை. பிரதிவாதிக்கும் அவரது தாயாருக்கும் சரியான உறவுமுறை இல்லை. பிரதிவாதியின் தாயார் என் வீட்டில் வாடகைக்கு இருக்கும் போது பிரதிவாதி அவரது தாயார் வீட்டிற்கு வந்தது இல்லை. அவரது தாயார் தான் பிரதிவாதியை எப்போதாவது பார்த்துவிட்டு வருவார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 முதல் பக்கத்தில் யாரும் கையொப்பம் போடவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ஐ நான் தாக்கல் செய்யவில்லை. நான் 5ம் வகுப்புவரை படித்திருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 முதல் பக்கத்தில் கடைசிக்கு முந்தைய வரியில் புஷ்யா என்று இருக்கிறது. பிரதிவாதியின் தாயார் என்ன தொழில் செய்தார் என்று கேட்டால் அவர் கோயம்பேடு மார்க்கெட்டில் வட்டிக்கு விடுவார் மற்றும் அங்கே தொழில் செய்தார். பிரதிவாதியின் தாயார் அவரது குடும்ப செலவிற்காக கடன் வாங்கியதாக வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ளது. 19.11.2020 மற்றும் 23.11.2020ல் தொகை மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கும் போது யார் யாருக்கு கொடுத்ததாக வாசா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்று கேட்டால் குறிப்பிடப்படவில்லை.

வா.சா.ஆ1ல் 2வது பக்கத்தில் அடியில் கண்டுள்ள விவரங்களை நான் தான் எழுதினேன். பிரதிவாதியின் தாயார் எழுத சொன்னதால் எழுதினேன். அந்த விவரத்தை என் முதல் விசாரணையில் சொல்லவில்லை. 13.05.2021ல் பிரதிவாதியின் தாயார் காலமானார். பிரதிவாதி அவரது தாயார் இறந்த பின்னர் எத்தனை நாட்கள் கழித்து அவருடைய பொருட்களை எடுக்க வந்தார் என்று பிராதில் சொல்லவில்லை. அவருடைய பொருட்களை கொடுக்க மறுத்துவிட்டேன் என்றும் பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் செய்து போலீஸாரின் அறிவுறுத்தலின் பேரில் பொருட்களை கொடுத்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தாயார் கடன் வாங்கிய விவரத்தை பிரதிவாதியிடம் நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அவர் கடன் வாங்கியதாக காவல் நிலையத்தில் தான் நான் முதல் முதலில் கூறினேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ1ல் 2வது பக்கத்தில் உள்ள மேற்குறிப்புகள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தேதிகள் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. வெங்கட் என்பவர் தான் அதை எழுதினார். அவர் அதை எழுதியதாக வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்படவில்லை. நான் ரயில்வேயில் வேலை பார்த்து வருகிறேன். பிரதிவாதியின் தாயார் வட்டி தொழில் செய்தார் என்பதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால் அவருடைய ஆவணங்களை நான் எப்படி தாக்கல் செய்யமுடியும். அவர் வட்டி தொழில் செய்யவில்லை என்றும் காய்கறி வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. வட்டி தொழில் செய்யவில்லை என்றும் ஆகவே தான் அதற்கான

ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. டேனியல் என்ற வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினேன். அறிவிப்பை அனுப்ப நான் தான் தகவல் சொன்னேன். நான் அனுப்பிய அறிவிப்பில் 23.11.2021ல் ரூபாய் 2 லட்சம் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதிவாதியின் தாயார் யார் யாருக்கு கடன் கொடுத்தார் என்று பிராதில் சொல்லவில்லை. பிரதிவாதியின் தாயார் என்னுடன் வாடகை ஒப்பந்தம் எழுதும் எழுதிகொள்ளவில்லை. வாடகை பெற்றதற்கு ரசீது கொடுத்தேனா என்று கேட்டால் கிராமத்தில் யாரும் ரசீது கொடுப்பதில்லை. முதலில் பிரதிவாதியின் தாயார் என்னிடம் ரூபாய் 6.5 லட்சத்தை கடனாக வாங்கினார். தேதி ஞாபகமில்லை. அவ்விதம் கொடுக்கவில்லை என்றும் ஆகவே தான் தேதி தெரியவில்லை என்றால் சரியல்ல. அதன்பிறகு அவர் ரூபாய் 3 லட்சத்தை கடனாக வாங்கினார். அவ்வப்போதும் ரூபாய் 20 ஆயிரமாக பலமுறை வாங்கி சென்றார். பிரதிவாதியின் தாயார் கடன் வாங்கும்போது என்னுடைய மகள் என் உடன் இருந்தார். அந்த விவரத்தை பிராதில் சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் என் முதல் விசாரணையை நான் தாக்கல் செய்யவில்லை. என் முதல் விசாரணையில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2ஐ நான் கைவசம் வைத்துக் கொண்டு அதை வைத்து பொய்யாக புரோநோட்டை தயாரித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2ல் உள்ள கையெழுத்துக்களுக்கிடையே மாறுபாடு இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல.

எனக்கும், பிரதிவாதியின் தாயாருக்கும் கொடுக்கல் வாங்கல் இல்லை என்றும் அவர் இறந்த பின்னர் பிரதிவாதியிடம் பணம் பறிப்பதற்காக மோசடியாக ஆவணங்களை தயாரித்து வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தாயார் எனக்கு ரூபாய் 17லட்சத்து 42ஆயிரம் கொடுக்க வேண்டும். வாசாஆ.1ல் ரூபாய் 17லட்சத்து 40ஆயிரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பணம் எதும் கொடுக்கவில்லை என்றும் ஆகவே தான் தொகையை தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1. 2வது பக்கத்தில் ரூபாய் 10 ஆயிரம் என்பதில் திருத்தம் இருக்கிறது. அதற்கு அருகில் சுருக்கொப்பம் எதுவும் இல்லை. பிராது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. அரசு பணியில் இருப்பவர்கள் வட்டிக்கு கொடுப்பது தவறு என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.